**CC No.202/2013 அ.சா.1: நாகராஜன் த/பெ.சாத்தையா நாள்: 18.08.2025**

**(1,3,6,9 எதிரிகள் ஆஜர்)**

**(2, 4, 7, எதிரிகள் ஆஜரில்லை. எதிரிகள் தரப்பில் குவிமுச பிரிவு 317 இன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அது அனுமதிக்கப்பட்டது.)**

**சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கபடுகிறார்.**

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

1. இவ்வழக்கின் புகார்தாரரான வள்ளி எனது அம்மா உறவு முறை ஆவார். எனக்கும் எனது குடும்பதினருக்கும் சொத்து சம்பந்தமாக பிரச்சனை இருந்து வருகிறது என்றால், சரிதான். மேற்படி சொத்து சம்பந்தமாக புதுக்கோட்டை முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் O.S.70/2012 என்ற எண்ணின் கீழ் வழக்கு நிலுவையில் உள்ளது என்றால், சரிதான். ஆஜர் எதிரிகள் சம்பவ நடந்ததாக கூறப்படும் நாளில் என்மீதும் என் குடும்பத்தினர் மீதும் புகார் அளித்து வழக்கு(Cr.No.87/2013, STC No.424/2017) நிலுவையில் இருந்து வருகிறது என்றால், சரிதான்.

2. நான் இவ்வழக்கு சம்பவம் சம்பந்தமாக கூறப்படும் எதுவும் நடக்கவில்லை என்றால், சரியல்ல. எதிரிகள் தரப்பில் எங்கள் மீது கொடுக்கப்பட்ட புகார் மீது பழிவாங்கும் நோக்கில் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால், சரியல்ல. நான் அவ்வாறு கொடுக்கப்பட்ட புகாருக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**மறுவிசாரணை:**

இல்லை.

**CC No.202/2013 அ.சா.5: சாத்தையா த/பெ.முத்தையா பிள்ளை நாள்: 18.08.2025**

**(1,3,6,9 எதிரிகள் ஆஜர்)**

**(2, 4, 7, எதிரிகள் ஆஜரில்லை. எதிரிகள் தரப்பில் குவிமுச பிரிவு 317 இன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அது அனுமதிக்கப்பட்டது.)**

**சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கபடுகிறார்.**

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

இவ்வழக்கின் புகார்தாரர் வள்ளி எனது மனைவி ஆவார். இவ்வழக்கு சம்பந்தமாக எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால், சரிதான். எங்களுக்கும், ஆஜர் எதிரிகள் குடும்பத்திற்கும் சொத்து சம்பந்தமாக பிரச்சனை இருந்து வழக்கு நடைபெற்று வருகிறது என்றால், சரிதான். அ.சா.1 எனது மனைவி என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**மறுவிசாரணை:**

இல்லை.